DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No. 18/2021

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி

| | |
|---|---|
| Name | காந்திமதி |
| Father's Name | க/பெ. சக்திவேல் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 79 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2024.

**முதல் விசாரணை :–**

1. நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். மனு சம்பந்தமாக எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவற்றை சரி என ஒப்புக்கொண்டு கையொப்பங்கள் செய்துள்ளேன். எனது வழக்கிற்கு ஆதரவாக பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. முத்தையாபுரம் காவல்நிலைய குற்ற எண்.368/2019 முதல் தகவல் அறிக்கை 18.12.2019 தேதியிட்டது. சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 17.12.2019 விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும். தனபாலன் இறப்பு சான்றிதழ் 22.11.2022 தேதியிட்டது **ம.சா.ஆ.3**, தனபாலன் வாரிசு

சான்றிதழ் 09.01.2023 தேதியிட்டது **ம.சா.ஆ.4** , பதிவு எண். TN 69 BH 0830 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.5**, 18.12.2019 பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.6** ஆகும். STC 210/2021 குற்றவழக்கின் தீர்ப்பு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.7**, முத்தையாவுரம் காவல்நிலைய குற்ற எண். 368/2019 இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.8**. எனது ஆதார் அட்டை , வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் நகல் முறையே **ம.சா.ஆ 9, 10** ( அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). TN 69 BH 0830 வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் **ம.சா.ஆ.11** , மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

<u>**இரண்டாவது எதிர் மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**</u>

1. நடந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஸ்பிக்–லிருந்து கிழக்கு பகுதியிலிருந்து மேற்கு பகுதியை நோக்கி சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். TN 69 BH 0830 என்ற எண்ணுள்ள வாகனம் வருவதை கவனிக்காமல் ரோட்டை என் மகன் கடந்த காரணத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருபுறமும் சாலையை பார்த்து வாகனம் வருவதை கவனித்து எனது மகன் சாலையை கடந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் எனது மகனை முதல்உதவி தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான்.

3. அதன்பின் தூத்துக்குடி திரவியம் மருத்துவமனை மற்றும் தூத்துக்குடி செல்வராஜ் மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை எடுத்துக்கொண்டு அதன்பின்பு மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடியில்

உள்ள லட்சுமி பாலிகிளினிக்–ல் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். 17.12.2019 முதல் 15.01.2020 வரை உள்நோயாளியக இருந்து வருவதற்கான எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன். மருத்துவரை விசாரிக்கவுள்ளேன். அதற்கான சிகிச்சைக்கான மருத்துவ பில்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. அதன்பின்பு உடல்நிலை சீராக உள்ளதால்தான் எந்த மருத்துவ ஆணவணங்களையும் பாதுகாக்கமல் இருந்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கான காயங்கள் அனைத்தும் பூரணமாக குணமடைந்து நல்ல நிலையில் தனது வேலைகளை செய்து கொண்டு இரண்டு வருடங்களாகியும் எந்தவொரு தொந்தரவும் இல்லாமல் நல்ல நிலையில் இருந்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. வயோதிகத்தின் காரணமாகதான் எனது மகன் 64வது வயதில் இயற்கை எய்தினார் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் அவர் இயற்கை எய்தவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் அவர் இறந்திருந்தால் அவரை பிரேத பரிசோதனை செய்து அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு விபத்திற்கு முன்பு திருமணம் ஆகியிருந்ததாக என்றால் திருமணம் ஆனது ஆனால் ஒருசில நாட்களிலேயே பிரிந்துவிட்டார்கள், விவாகரத்து ஆகிவிட்டது. விபத்திற்கு முன்பு அவர் கொத்தனாரக வேலை பார்த்து மாதம் ரூ.25000/– சம்பாதித்து வந்தார் என்பதற்கான ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதனால் வருமான இழப்பு ரூ.18,90,000/– வரை வருமான இழப்பு ஏற்படுத்தி விட்டதாக கூறியிருப்பது

அதிகப்படியாக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்கான நோக்கத்தில் கோரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவ செலவுகளுக்காக ரூ.10,00,000/– கோரியிருப்பது அதற்கான எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அதற்குரிய இழப்பீடு தொகை கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்பின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது அது கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. சரியாக பார்த்து ரோடை கடந்திருந்தால் இந்த விபத்தை முற்றிலும் தவிர்த்திருக்கலாம் என்றும் எனது மகனின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டதால் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை: இல்லை</u>**

ஒம்/–P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**